நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 246/2024

## P.W. 12 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மணிமாறன் |
| தந்தை / கணவர் பெயர் | : | மணியன் |
| கிராமம் | : | மணிவிழுந்தான் வடக்கு |
| வட்டம் | : | தலைவாசல் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW12 |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 11–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.20 PM

1. நான் தற்போது கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.01.2024 ம் தேதி மதியம்14.00 மணிக்கு சேலம் மாவட்டம், கொளத்தூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜா என்பவர் நிலைய அலுவலில்

இருந்தபோது, மேட்டூர் வனச்சரக அலுவலர் திரு. சுரேஷ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண்.21/2024, ச.பி. 294(பி), 353, 506(i) IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தார்.

2. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து, இவ்வழக்கினை முதல்கட்ட புலன்விசாரணை மேற்கொண்டுள்ளார். 23.01.2024 ம் தேதி மதியம் 14.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் விஜய் மற்றும் முருகேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார்.

3. சம்பவயிட சாட்சிகளான சுரேஷ்குமார், சதீஷ், பத்ரன், நல்லதம்பி, கோகுலகண்ணன், கண்ணம்மாள், ஈஸ்வரி, ராசம்மாள், முருகேசன், விஜய் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் 1 சின்னப்பன், 2 ம் எதிரி வினோத்குமார் இருவரும் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்ற காரணத்தால் இவ்வழக்கில் எதிரிகளை கைதுசெய்யவில்லை.

4. இவ்வழக்கானது முதல்கட்ட புலன்விசாரணை முடித்திருந்த நிலையில் கடந்த 18.03.2024 ம் தேதி இவ்வழக்கு கோப்பை பெற்று இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டும், சாட்சிகளை விசாரணை செய்தபோதும் முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரியிடம் சொன்னதையே என்னிடம் சாட்சிகள் தெரிவித்ததால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை. இவ்வழக்கை முதல்கட்ட புலன்விசாரணை மேற்கொண்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

5. பின்னிட்டு இவ்வழக்கில் புலன்விசாரணை முடித்து கடந்த 22.03.2024 ம் தேதி இவ்வழக்கில் ச.பி. 294(b), 353, 506(i) IPC வழக்கில் இறுதியறிக்கை தாக்கல்

செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 2 வது முறையாக இவ்வழக்கின் சாட்சிகளை 18.03.2024 ம் தேதி அன்று சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டும், சம்பவயிட சாட்சிகளை விசாரணை செய்தேன். அதன் பின்னிட்டு புகார்தாரர் மற்றும் அரசு தரப்பு சாட்சிகளை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தேன்.

2. சம்பவயிட சாட்சிகள் மற்றும் அரசு தரப்பு சாட்சிகளை 18.03.2024 மற்றும் 19.03.2024 ம் தேதியிலும், முதல்கட்ட புலன் விசாரணை அதிகாரியை 22.03.2024 ம் தேதியும் விசாரணை செய்தேன். சம்பவயிட சாட்சிகள் மற்றும் அரசு தரப்பு சாட்சிகளை 18.03.2024 மற்றும் 19.03.2024 ம் ஆகிய இரண்டு தேதிகளில் விசாரணை செய்தேன்.

3. முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வுநாள் 22.01.2024 ம் தேதி இரவு 08.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த நாள் மற்றும் நேரம் 23.01.2024 ம் தேதி 14.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்தநேரத்தில்தான் காவல் நிலையம் ஆஜராகி வாதி சுரேஷ்குமார் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

4. இவ்வழக்கில் புகார் கொடுத்தவர் அரசு அதிகாரி என்றால் சரிதான். இவ்வழக்கானது அரசு அதிகாரியை அரசுப்பணி செய்யவிடாமல், தகாத வார்த்தைகளால் திட்டி, கொலைமிரட்டல் விடுத்ததற்கான வழக்கு என்றால் சரிதான். சம்பவம் நடந்தது தொடர்பாக சுமார் 18 மணி நேரம் கழித்துதான் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. முதல் தகவல் அறிக்கை காலம் 8 ல் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டால் அதற்கான காரணத்தை குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் காலதாமதம் இல்லை. இவ்வழக்கில் அரசு அதிகாரி தாக்கப்பட்டிருப்பதால்

உண்மையில் அப்படியொரு சம்பவம் நடந்திருந்தால் சம்பவம் நடந்த உடனே புகார் கொடுத்திருப்பார்கள், அரசு அதிகாரி புகார் கொடுத்ததால் 18 மணிநேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்ட புகாரை சரிவர விசாரிக்காமல் காலதாமதத்திற்கான காரணத்தையும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடாமல், அரசு அதிகாரிக்கு ஆதரவாக இந்த பொய் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. இவ்வழக்கில் சம்பவம் தொடர்பாக எங்களது உயர் அதிகாரிகள் மூலம் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பட்டதா என்றால் முதல்கட்ட புலன்விசாரணை அதிகாரிக்குதான் தெரியும். நான் அன்றைய தேதியில் கொளத்தூர் காவல்நிலையத்தில் பணியில் இல்லை.

7. சம்பவயிடத்தை எனக்கு முதல்கட்ட புலன்விசாரணை அதிகாரி மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் அடையாளம் காட்டினார்கள். இந்த வழக்கில் எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் இவ்வழக்கின் எதிரிகளாக எவ்வாறு தெரிந்துக்கொண்டேன் என்றால் எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தின் மூலம் முன்ஜாமீன் மனு தாக்கல் செய்து காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து வந்தார்கள். மேலும் நான் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் எதிரிகளை தெரிந்துக்கொண்டேன்.

8. இவ்வழக்கின் 1ம் எதிரி சின்னப்பன் என்பவர் நன்கு படித்தவர், ஊரில் மரியாதைமிக்க நபர், தொடர்ந்து கருங்கல்லூர் கிராமத்தில் 4 முறை பஞ்சாயத்து தலைவராக இருந்து பல பஞ்சாயத்துக்களை சுமூகமுறையில் தீர்த்து மக்கள் சேவை செய்து வந்தார் என்றால் அதுப்பற்றி தெரியாது.

9. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் கிராம நிர்வாக அலுவலர் சம்பவயிடம் வந்தாரா, காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தாரா, தனியாக புகார் ஏதாவது கொடுத்தாரா என்று முதல் கட்ட புலன்விசாரணை அதிகாரியிடம் விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் கிராம நிர்வாக அலுவலருக்கு சம்பவம் குறித்து தகவல் தெரிவித்ததாக தெரிந்துக்கொண்டேன். மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது.

10. இவ்வழக்கு கருங்கல்லூர் கிராமம், மூலக்கொட்டாயில் வசிக்கும் மகேந்திரன், த.பெ. குருசாமி என்பவர் சட்ட விரோதமாக கருங்காலி கட்டையை வெட்டி அவருடைய அக்கா ஈஸ்வரி என்பவரது தோட்டத்தில் பதுக்கி வைத்ததாகத்தான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. மேற்படி மகேந்திரனை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. மகேந்திரனுக்கு ஆதரவாகத்தான் இந்த வழக்கின் எதிரிகள் பிரச்சனை செய்ததால் அவர் எனது வழக்கிற்கு நம்பத்தகுந்த சாட்சியம் இல்லை என்பதால் அவரை நான் விசாரிக்கவில்லை. நான் சொல்வது தவறென்றாலும், நான் சொன்னவாறு சம்பவம் நடந்திருந்தால் அவரையும் ஒரு சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல.

12. கருங்கல்லூர் கிராமம் கிராம நிர்வாக அலுவலரை இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை. நான் முழுமையாக விசாரணை செய்திருந்தால் மேற்படி கிராம நிர்வாக அலுவலரையும் நான் சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. கருங்காலி கட்டை தொடர்பாக வனத்துறையினர் தனியாக வழக்கு பதிவுசெய்து அவர்கள் கருங்காலி கட்டையை எடுத்துச்சென்றுவிட்டனர். அந்த வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது.

13. மேற்படி வழக்கு ஆவணங்களை பெற்று நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் வழக்கு எண் தெரியும் குற்ற எண்.9/2024, ச.பி. 26C தமிழ்நாடு வனச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தது. அதுத்தொடர்பான ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் எதிரிகள் முன்பிணை பெறும்போது மேற்படி விவரங்களை மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

14. அந்த வழக்கில் முன்பிணை பெற்று எதிரிகள் காவல் நிலையத்தில் கையெழுத்து போடும்போது நான் கொளத்தூர் காவல்நிலையத்தில் பணிக்கு வந்துவிட்டேன். மேற்படி வனத்துறை வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்களை காவல் நிலைய வழக்கு கோப்பை வைத்துதான் நான் இந்த நீதிமன்றத்தில் தெரிவிக்கிறேன். அந்த ஆவணங்களை நான் இந்த வழக்கில் இறுதியறிக்கை தாக்கல்

செய்யும்போது தாக்கல் செய்யவில்லை.

15. உண்மையில் நான் சரிவர புலன்விசாரணை செய்திருந்தால் இந்த வழக்கில் மேற்படி ஆவணங்களை பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு செல்லாமலும், நான் இரண்டாவது முறையாக சாட்சியை விசாரிக்காமலும், உண்மையில் விசாரித்திருந்தால் மகேந்திரன் மற்றும் கருங்கல்லூர் கிராம நிர்வாக அலுவலரையும் விசாரித்திருப்பேன் என்றாலும், அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்திலேயே தயார் செய்து இவ்வழக்கின் புகார்தாரர் அரசு அதிகாரி என்பதால் காலதாமதமாக புகாரினை பெற்று காலதாமதத்திற்கான காரணத்தை குறிப்பிடாமலும் அரசு அதிகாரிக்கு ஆதரவாக பொய் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.05 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**